[1979 மார்ச் 27]

வைகுண்டவாசகப் பெருமாள் கோவில், திருப்பணி.

*வினா எண். 546—திரு. மொ. பரமசிவம்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வானூர் ஒன்றியம் கிளியனூர் கிராமத்தில் அமைந்துள்ள வைகுண்டவாசகப் பெருமாள் கோவில் திருப்பணிக்கு நிதி வசதி அளிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:

தற்போது இல்லை.

Film Finance Corporation

*Q. No. 547: Thiru N. KUTTAPPA: Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state:

(a) whether there is any proposal to set up a Film Finance Corporation for Tamil Nadu and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின் விவரங்கள் அரசின் பரிசீலனையிம் உள்ளது.

கோவை நகராட்சியில் குடிதண்ணீர் மீதான வரி.

*வினா எண். 548—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கோவை நகராட்சி குடிதண்ணீர் வரியை உயர்த்தும் யோசனை குறித்து விளம்பரப்படுத்தியுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) நகராட்சி சார்பில் விசேஷ அதிகாரியவர்கள் கூட்டிய மக்கள் பிரதிநிதிகளின் கூட்டத்தில் இந்த வரி உயர்வை சுமத்தக் கூடாதென்று அனைவரும் கூறியுள்ளது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u>

(அ) ஆம்.

(ஆ) மறுப்புகள் எழுப்பப்பட்டன. நகராட்சி அவற்றை ஏற்கவில்லை.

(இ) இது நகர் மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டதால் அரசு தலையிடவில்லை.

<u>திரு. நா. சுந்தரராஜ் :</u> பாயிண்ட் ஆப் ஆர்டர், மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஒரு கேள்விக்கு பதில் சொல்லும் போது அறிக்கை வைத்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அறிக்கை வைக்கப்பட்டிருப்பதாக தெரியவில்லை. ஆதலால் கேள்விக்குள்ள பதிலை இங்கு சொன்னால் நல்லது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் சொல்லுகின்ற கேள்வி தள்ளி போடப்பட்ட கேள்வி, இப்போது கேள்வி 548 எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

<u>திரு. கு. ரமணி :</u> தலைவர் அவர்களே, நகராட்சிகள் எல்லாம் தனி அதிகாரிகள் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. அதற்கான சட்டங்களை நாம் இங்கே கொண்டுவந்திருக்கிறோம். இந்த நிலையில் தனி அதிகாரிகளே வரிகளை ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லும்போது, இது தனி அதிகாரிகள் எல்லைக்குள் இருக்கிறது, இதற்குள் அரசு தலையிடாது என்று சொல்வதாக இருந்தால், அது நியாயம் தானா, அரசு இப்படிப்பட்ட நடவடிக்கையை எடுக்கலாமா? அப்படியென்றால் பொது மக்களின் கோபத்திற்கு இந்த அரசு இரையாகாதா? இதை சிந்திக்க வேண்டாமா? பெரிய டெமான்ஸ்ட்ரேஷன் எல்லாம் நடந்திருக்கிறது. இப்போதாவது இதை கணக்கில் எடுத்துக் கொண்டு புதிய கவுன்சில் தேர்ந்தெடுத்து வருவது வரையிலும் வரியை உயர்த்தக் கூடாது என்று அரசு உத்தரவு போடுவார்களா?

1979 மார்ச் 27]

[முற்பகல் 9–30]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: சிறுவாணி குடிநீர்த்திட்ட செலவுகளுக்காக ஆயுள் காப்புக் கழகத்திடமிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஐந்து கோடி ரூபாய் கடன் பெறும் போது அங்கீகரித்த நிபந்தனைகளின்படிதான் இந்த வரி உயர்வு செய்யப்பட்டிருக்கிறது, ஆகவே, இதிலே தலையிட அரசால் இயலவில்லை.

திரு. க. மருதாசலம் : கோவை நகராட்சி தண்ணீர் வரியை உயர்த்த வேண்டிய அவசியம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கூடுதல் செலவை ஈடு கட்ட.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : கோவை நகருக்கு குடிதண்ணீர் கொடுக்கும் போது சிறுவாணி குடிநீர்த்திட்டத்திற்கு ஆன செலவுத் தொகை முழுவதையும் கணக்கிட்டு அதற்கு ஆகக்கூடிய வட்டியையும் கணக்கிட்டு அதன் அடிப்படையில் இந்த வரியைப் பொதுமக்கள் மேல் விதித்து வசூலிக்கும் நடவடிக்கையில் தனி அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏற்கனவே இரண்டு ரூபாயாக இருந்த வரி இப்போது 10 ரூபாய், 15 ரூபாய் என்ற அடிப்படையில் ஒன்றுக்கு எட்டு மடங்கு அளவுக்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கா.காளிமுத்து : இது ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட நிபந்தனை. அரசிதழில் ஏற்கனவே வெளியிடப் பட்டிருக்கிறது. அதற்குப் பிறகுதான் வரி திருத்தம் செய்யப் பட்டிருக்கிறது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : கோவையில் மாத்திரமல்ல நாடெங்கிலும் இது தொடருகிறது. ஜூன் மாதம் தேர்தல் வர இருக்கிறது. இடையில் இரண்டு மாதம் தான் இருக்கிறது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இப்போது இல்லாமல் தனி அதிகாரிகளால் இப்படி தண்ணீர் வரி உயர்வு ஏற்பட்டிருப்பதால் மக்கள் மிகவும் அவதிக்குள்ளாயிருக்கிறார்கள். தண்ணீரே வேண்டாம் என்று சொல்லும் அளவுக்கு மக்கள் மத்தியில் ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது. அரசு இந்த நிலை பற்றி பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஏற்கனவே ஒரு நிபந்தனையை ஏற்றுக் கொண்ட பிறகுதான் இந்தத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே தேர்தலுக்கும் இதற்கும் தொடர்பில்லை.

திரு. ஆ. நடராசன் : கோவை நகராட்சியில் லாரிகள் மூலம் விநியோகிக்கப்படும் குடிதண்ணீருக்குக் கட்டணம் வசூலிக்கப் படுகிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதைப்பற்றிய தகவல் இல்லை.

திரு கு. ரமணி : எல். ஐ. சி. யிடமிருந்து கடன் வாங்கியதால் வட்டி கட்ட வேண்டியிருக்கிறது, அசல் கட்டவேண்டியிருக்கிறது. அதற்கு ஏற்கனவே ஒப்புதல் கொடுத்துள்ளதால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். கோவை நகரம் மட்டுமல்ல, ஏற்கனவே அந்த வட்டாரத்தில் இருக்கும் சிங்கா நல்லூர் முனிசிபால்டியை எல்லாம் சேர்த்து பல கிராமங்களும் இந்தத் தண்ணீரைப் பெறுகின்றன. அப்படி இருக்க கோவை நகர மக்கள் மீது மட்டும் இந்த வரியை விதிப்பது நியாயமா? எல். ஐ சி. யிடமிருந்து வாங்கிய பணத்திற்கான வட்டி அசல் எல்லாவற்றையும் மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டுதான் மக்களிடம் வசூல் செய்துதான் தண்ணீர் கொடுப்பது என்பதுதான் கொள்கையா?

மாண்புமிகு திரு, கா. காளிமுத்து : தண்ணீரைப் பயன்படுத்து கிறவர்கள்தான் அதற்குரிய வரியைத் தந்தாக வேண்டும்.

நகராட்சிப் பேருந்து நிலையம், சிதம்பரம்.

* வினா எண். 549—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரம் நகராட்சிப்பேருந்து நிலையம்கட்டப்பட்டும் திறக்கப்படாததற்கான காரணம் யாது ?

(ஆ) எவ்வளவு ரூபாய் செலவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) தற்போது பயன்படுத்தப்படுகிறது.

(ஆ) ரூ. 13.36 இலட்சம்.